## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# 16,895 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு

சென்னை,அக்.29

தீபாவளி பண்டிகையையொட்டி பொதுமக்களின் வசதிக்காக 16,895 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்து துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையையொட்டி சென்னை, கோவை, பெங்களூரு உள் ளிட்ட பல்வேறு பகுதிகளில் பணி, படிப்பு நிமித்தமாக தங்கியிருப்போர், தொழில் புரிவோர் என லட்சக்கணக்கானோர் சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொள்வர். அதன்படி, பயணிகளின் வசதிக்கேற்ப தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கபடுவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டு தீபாவளியை ஒட்டி, சிறப்புப் பேருந்துகள் இயக்குவது தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது. இக்கூட்டத்தில், போக்குவரத்து துறை செயலர் பணீந்திர ரெட்டி, சிறப்புச் செயலாளர் வெங்கடேஷ். ஆணையர் சண்முக சுந்தரம், காவல் துறை உயர் அதிகாரிகள், அரசு அதிகாரிகள் மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் பங்கேற்றனர்.



இக்கூட்டத்திற்கு பிறகு இந்தாண்டுக்கான தீபாவளி சிறப்பு பேருந்துகள் இயக்கம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி. நவம்பர் 9ம் தேதி முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. அந்தவகையில், சென்னையில் இருந்து நவம்பர் 9 ம் தேதி 3,465 பேருந்துகளும், 10 ம் தேதி 3,395 பேருந்துகளும், 11ம் தேதி 3,515 பேருந்துகள் என 10,975 பேருந்துகள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பிற ஊர்களுக்கு செல்ல 5,920 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் 16,895 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

தீபாவளி பண்டிகை முடிந்து நவம்பர் 13 ம் தேதி முதல் 15ம் தேதி வரை 13,292 தினசரி பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் மட்டும் 6 முக்கிய இடங்களில் இருந்து ஏற்கனவே பண்டிகை காலங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டன. அதைப்போல மீண்டும் அங்கிருந்து இயக்க முடிவு செய்யப்பட்டது. அவை, கோயம்பேடு பேருந்து நிலையம், பூந்தமல்லி பேருந்து நிலையம், தாம்பரம் நிலையம் பேருந்து நிலையம், தாம்பரம் ரயில் நிலையம், கே.கே.நகர், மாதவரம் பேருந்து நிலையம் ஆகும்.

மாதவரம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து ரெட்ஹில்ஸ் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திரா செல்லும் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

கலைஞர் நகர் (கே.கே. நகர்) பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கு கடற்கரை சாலை வழியாக புதுச்சேரி, கடலூர் மற்றும் சிதம்பரம் செல்லும் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

தாம்பரம் மெப்ஸ் அண்ணா பேருந்து நிலையத்தில் இருந்து திண்டிவனம், விக்கிரவாண்டி, பண்ருட்டி, கும்பகோணம் ஆகிய பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திண்டிவனம் வழியாக திருவண்ணாமலை, போளூர், பண்ருட்டி, நெய்வேலி, வடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், புதுச்சேரி, கடலூர் செல்லும் பேருந்துகள் தாம்பரம் ரயில்வே நிலைய பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பூந்தமல்லி பேருந்து நிலையத்தில் இருந்து வேலூர், ஆரணி, ஆற்காடு. திருப்பத்தூர், காஞ்சிபுரம், செய்யாறு, ஒசூர், திருத்தணி, திருப்பதி ஆகிய இடங்களுக்கு இயக்கப்பட உள்ளன.

கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து மயிலாடுதுறை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், , நாகர்கோவில், மார்த் தாண்டம், கன்னியாகுமரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காரைக்குடி, புதுக்கோட்டை, அரியலூர், திண்டுக்கல், விருதுநகர், திருப்பூர், பொள்ளாச்சி, ஈரோடு, ராமநாதபுரம், சேலம், கோயம்புத்தூர், பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது



திருவண்ணாமலையில் தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் நீட் தேர்வு ரத்து செய்யக் கோரி 10 லட்சம் மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார். உடன் மாநிலச் செயலாளர் கு.கருணாநிதி, டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரிய விஜயரங்கன், பார்வதிசீனுவாசன் சி.ராம்காந்த் உட்பட பலர் உள்ளனர்.

## 'நீட்' தேர்வு விலக்கு: தமிழ்நாடு அரசின் உரிமை சார்ந்தது மட்டுமல்ல;

# மருத்துவத்துறையின் - மாணவர்களின் எதிர்காலம் குறித்தது! சிந்திக்குமா ஒன்றிய அரசு?

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, அக்.29-

சென்னை வந்த குடியரசுத் தலைவரிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கக் கோரி மனு அளித்துள்ளார். இது தமிழ்நாடு அரசின் உரிமை சார்ந்தது மட்டுமல்ல; எனவும் மருத்துவத்துறை மற்றும் மாணவர்களின் எதிர்காலம் குறித்தது எனவும் இது பற்றி ஒன்றிய அரசு சிந்திக்குமா? எனக்கேட்டு 'தினகரன்' நாளேடு தலையங்கம்வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ கல்வி பயில மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டபோது, ஏழை, நடுத்தர மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் பலர் தங்களது மருத்துவ கனவை நிறைவேற்றினர். ஆனால், ஒன்றிய அரசு, நீட் என்ற பெயரில் இந்த வாய்ப்பை தகர்த்து, சின்னாபின்னமாக்கியது. நீட் விலக்கு கோரி தமிழ்நாடு அரசு கொண்டு வந்த மசோதாவுக்கு அனுமதி அளிக்காமல் தமிழ்நாடு ஆளுநரும், குடியரசு தலைவரும் நிலுவையில் வைத்துள்ளனர்.

இப்படிப்பட்ட சூழலில் நீட் தேர்வு நடத்துவது, மாணவர்கள் மீது மட்டுமல்ல, மாநிலங்களின் உரிமைகள் மீதான திணிப்பு ஆகும். கூட்டாட்சி தத்துவ அடிப்படையில் இது தவறான அணுகுமுறை ஆகும். ஒன்றிய அரசின் எதேச்சதிகார போக்கையே இது காட்டுகிறது. 2001-2014 வரை குஜராத் முதல்வராக நரேந்திர மோடி இருந்த போது, 8 மருத்துவக்கல்லூரிகள் மட்டுமே திறக்கப்பட்டன. அதில் 5 அரசு கல்லூரி. அதே நேரத்தில், தமிழ்நாட்டில் 13 அரசு மருத்துவக்கல்லூரிகள் திறக்கப்பட்டன. இந்த கல்லூரியில் சுமார் 22 ஆயிரம் ரூபாய் செலவிலேயே மருத்துவம் படிக்க இயலும்.

ஆனால், தற்போது நீட் பயிற்சி நிலையங்களில் லட்சங்களில் செலவு செய்து, தேர்வாகி வருபவர்களால் இந்த இடங்கள் நிரப்பப்படுபட்டால், குறைந்த செலவில் ஏழை மாணவர்கள் மருத்துவம் படிக்கும் இயலாமல் போகும் அபாய சூழல் எழுந்துள்ளது. காமராஜர், முதல்வராக இருந்த போது, கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு நேர்முக தேர்வு நடக்கும். அப்போது மாணவர்களின் பெற்றோர் படிக்காதவர்களாக அல்லது ஏழையாக இருந்தால் அவர்களது பிள்ளைக்குத்தான் அவர் முதலில் வாய்ப்பு அளிப்பார். "அரசு ஊழியர் பிள்ளையோ, படித்தவர்கள் பிள்ளையோ எப்படியாவது கல்லூரியில் சேர்ந்துவிடும். ஆனால், ஏழைகள் கல்வி பயின்றால்தான், அவர்களது சந்ததியே வளரும்" என்று விளக்கமும் அளிப்பார்.




ஆனால், ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள நீட் தேர்வு, மாநில கல்வி முறையில் நன்றாக படிக்கும் ஏழை மாணவர்களை அடியோடு நசுக்குவதாக உள்ளது. அத்துடன், நீட் தேர்வை காரணம் காட்டி, பிராய்லர் பண்ணைகளை போல் பயிற்சி நிலையங்கள் வீதிக்கு வீதி உருவாகிவிட்டன. இவை லட்சங்களை குவிக்கின்றன. இப்படி செலவழித்து படிக்க வருபவர், மருத்துவத்தை வைத்து கோடிகளில் சம்பாதிக்க விரும்புவாரா? இல்லை, கிராமங்களுக்குச் சென்று ஏழைகளுக்கு சேவை செய்ய நினைப்பாரா? மகத்தான இந்த மருத்துவ சேவை துறையை வணிகமாக்கிவிட்டது ஒன்றிய அரசு.

இந்த அவலத்தை ஒழிக்கத்தான், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நித்தமும் போராடி வருகிறார். எத்தனை இடையூறுகள் வந்தாலும், எங்களது போராட்டத்தில் இருந்து பின்வாங்கப்போவதில்லை என தமிழ்நாடு முதல்வர் உறுதியாக உள்ளார். அந்த முயற்சியின் ஒரு பகுதியாக, நேற்று சென்னை வந்த ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம், நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கக்கோரி நேரில் மனு அளித்துள்ளார். வேறு எந்த மாநில முதல்வரும் ஜனாதிபதியை சந்தித்து மனு அளித்திராத நிலையில், தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின், பிள்ளையார் சுழி போட்டுள்ளார்.

இதன்மூலம் நீட் விலக்கில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது என்பதை தமிழ்நாடு முதல்வர் மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்டியிருக்கிறார். இனியும் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்காவிட்டால், தமிழ்நாட்டு மக்களுக்கு ஒன்றிய அரசு பெரும் துரோகம் செய்கிறது என்றே பொருள். இது, தமிழ்நாடு அரசின் உரிமை சார்ந்தது மட்டுமல்ல, மாணவர்களின் எதிர்காலம் குறித்தது மட்டுமல்ல, மருத்துவ துறையின் எதிர்காலம் குறித்தது. சிந்திக்குமா ஒன்றிய அரசு?

இவ்வாறு அத்தலையங்கத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறுகள் பாடநூல்களில் இருட்டடிப்பு எனும்

# ஆளுநரின் பேச்சு ஆதாரமற்றது - அடிப்படையற்றது!

## தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கண்டனம்!

சென்னை, அக். 29-

திராவிட இயக்கங்களின் ஆட்சியில் தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறுகள் பாட நூல்களில் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன என ஆளுநர் பேசியது ஆதாரமற்றது அடிப்படையற்றது! எனதமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கண்டனம் தெரிவித்துள்ளார்!

அவர் நேற்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது கூறியதாவது:-

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு அரசின் பாடநூல்களில் விடுதலைப் போராட்ட தியாகிகள் குறித்த வரலாறு பாடநூல்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்ற ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை ஆதாரமற்ற குற்றச்சாட்டை சுமத்தி யிருப்பது கண்டனத்திற்குரியது. ஆளுநர் அவர்கள் அவ்வாறு கூறும் போது குறைந்து பட்சம் தமிழ்நாடு பாட நூல்களை படித்துப் பார்த்திருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் பாடநூல்களை தினமும் மாணவர்களுக்கு போதித்து வரும் ஆசிரியர்களிடம் கேட்டிருக்க வேண்டும். இரண்டையும் செய்யாமல் ஏனோதானோ என்று உயர் பொறுப்பில் இருக்கும் ஆளுநர் பேசியிருப்பது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

தமிழ்நாடு அரசின் பாட நூல்களைப் பொறுத்தவரை 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் பாடங்கள் உள்ளன. குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த விடுதலை போராட்ட வீரர்கள் பற்றிய பாடங்கள், அவர்களின் வரலாறு, தியாகங்கள், அவர்கள் இந்திய விடுதலைக்காக ஆற்றிய பங்கு ஆகியவை படங்களுடன் தெளிவாக மாணவர்களுக்கு புரிந்து கொள்ளும் படி விளக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணமாக ஆறாம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் தேசத்தந்தை மகாத்மா காந்தி, கர்ம வீரர், முண்டாசு கவிஞர் பாரதியார், வீரமிகு வேலு நாச்சியார் ஆகியோரின் தியாக வரலாறுகள் இடம்பெற்றுள்ளன. ஏழாம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார், பசும்பொன் தேவர் திருமகனார் உ.முத்து ராமலிங்கனார், கன்னியத்திற்குரிய காயிதே மில்லத் ஆகியோரின் விடுதலைப் போராட்ட தியாகங்களும், எட்டாம் வகுப்பு தமிழ் பாடப்புத்தகத்தில் அரசியல் சட்ட மேதை அண்ணல் டாக்டர் அம்பேகர் பங்களிப்பும், ஒன்பதாம் வகுப்புதமிழ் பாடப்புத்தகத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், தந்தை பெரியார், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் ஆகியோரின் வரலாறுகளும் இடம்பெற்றுள்ளன.

பத்தாம் வகுப்பு பாடநூலில் திலகர், கோகலே, வ.வே.சு, பிபின் சந்திர பால், மோதிலால் நேரு, விபின் சந்திரர்,பகத்சிங், ராஜகுரு, சுகதே வினோபா பாவே, பட்டாபி சீதாராமையா, அருணா ஆசப் அலி, சத்தியமூர்த்தி, மூதறிஞர் ராஜாஜி, தமிழறிஞர் திரு.வி.க, என எண்ணற்ற தியாக வரலாறுகள் இடம் பெற்றுள்ளன.

ஆனால் இந்த வரலாறு எல்லாம் படித்து பார்க்காமல் படித்துப் பார்க்கவும் ஆர்வம் காட்டாமல் விடுதலைப் போராட்ட வீரர்களை சிறப்பித்து வரும் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான திராவிட மாடல் அரசை குறை காண வேண்டும் என்ற குதர்க்க எண்ணத்தோடு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றியிருப்பது உரை அல்ல. அந்தப் பதவிக்கு பொருத்தமில்லாத ஆதாரமற்ற அரசியல் பேச்சு!

இன்னும் சொல்லப் போனால்பத்தாம் வகுப்பு வரலாற்றுப் பாடப்புத்தகத்தில் ருக்மிணி லட்சுமிபதி, பூலித்தேவர்,ஒண்டிவீரன்,

குயிலி, வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை உள்ளிட்ட பல விடுதலைப் போராட்ட தியாகிகள் பங்களிப்பும், 11ம் வகுப்பு வரலாற்றுப் பாடப்புத்தகத்தில் திப்பு சுல்தான், ஜான்சி ராணி லட்சுமி பாய் ஆகிய விடுதலை வீரர்கள் பங்களிப்பும் இடம்பெற்றுள்ளதை மாணவர்கள் அறிவார்கள். அவர்களுக்கு பாடம் நடத்தும் ஆசிரியர்கள் அறிவார்கள். 12 ஆம் வகுப்பில் வாஞ்சிநாதன்,

சுப்பிரமணிய சிவா, மவுலானா அபுல் கலாம் ஆசாத், அலி சகோதரர்கள், ஜவஹர்லால் நேரு, ஆசாத், பகத் சிங், உள்ளிட்ட பலரின் விடுதலைப் போராட்ட வரலாறுகள் மிக அழகாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எனவே ஆளுநர் வெற்று மைதானத்தில் "கம்பு சுற்றுவதை"தவிர்க்கவேண்டும்.

சமூக நீதியைக் காக்கும் திராவிடம் ஒரு பழுத்த மரம். அதை மாண்புமிகு ஆளுநர் "பொய்" கல்லெறிந்து வீழ்த்தி விட முடியாது. திராவிடமும், சமூக நீதியும் வலுப்பெறும், உறுதியாகும், நிலைத்து நிற்கும். விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறு பாடநூல்களில் இருந்து நீக்கப்பட்டு விட்டது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் அடிப்படை இல்லாத மேடை பேச்சுக்கள் ஆளுநரின் பதவிக்குரிய கண்ணியத்தை மேலும் அடியோடு குறைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

## படப்பை ஆ.மனோகரன் தலைமை! குன்றத்தூர் தெற்கு - அமரம்பேடு ஊராட்சியில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு - சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன்- சைதை சாதிக் சிறப்புரை!

காஞ்சிபுரம், அக். 29-

குன்றத்தூர் தெற்கு கழக செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க மற்றும் அமரம்பேடு ஊராட்சி திமுக சார்பில் இன்று (29.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட முதல்வர் தளபதி ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. குன்றத்தூர் தெற்கு கழக செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ. மனோகரன் தலைமையில் நடைபெறும் இப்பொது கூட்டத்திற்கு காஞ்சிபுரம் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ஊராட்சி மன்ற தலைவர் பொன். ரமேஷ்கவி வரவேற்புரை ஆற்றுகிறார்.ஏ.இ.பரசுராமன், வி.அரி, மலர்விழி முருகன், ஏ.எஸ்.பாஸ்கரன், க.அருண், எழிலரசிரமேஷ், வானமதிசங்கர், வே.சங்கர், தீபலட்சுமி புருஷோத்தமன், ஜோஸ்பின் வேலாயுதம், நிர்மலா டில்லிப்பன், டி.பொன்னரசு, ஏ.ஏகாம்பரம், எஸ்.புருஷோத்தமன், ஆர்.கோவிந்தசாமி, கே.தசரதன், கொ.டில்லியப்பன், ஏ.எஸ். சத்தியகுமார், கே.நடராஜன், ஆ.குணசேகரன், ஆர்.மணிகண்டன், பெ.பச்சையப்பன், கிருஷ்ணவேணி ஜெயராஜ், இர.தமிழ்தாசன், குகௌரி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளர் நாடாளுமன்ற குழு தலைவர் திரு டி.ஆர்.பாலு எம்.பி, அவர்கள் மற்றும் மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்கள் மற்றும் தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணைத்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மு. சுப்ரமணி, வ.நந்தகோபால், இ.மணி, வாசுகிமகேஷ், சி.பார்த்தசாரதி, மு.இராஜேந்திரன், மா.பரிமேலழகன் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சங்கீதா வேலு, எஸ்.கர்ணன், கு.ஏழுமலை, சி.பாலகிருஷ்ணன் ஜி.ஏ.ராயப்பன், மலர்விழி தமிழ்அமுதன், க.தினேஷ், ம.ரேவதி, எஸ்.வைரம், கே. என்.சி.சத்தியமூர்த்தி, V.S.கோதண்டராமன், லட்சுமிஞானசேகர் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - ஆரணி மாலா சிறப்புரை!

# பெருங்களத்தூர் தெற்கில் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் -நல உதவிகள்!

## தலைமை: எஸ்.சேகர்! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - மேயர் வசந்தகுமாரி பங்கேற்பு!

காஞ்சிபுரம், அக்.29

காஞ்சி வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (29 -10-2023, ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் ஆர்.எம்.கே. நகரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதிக் கழகச் செயலாளர் பெருங்களத்தூர் எஸ்.சேகர் தலைமை வகிக்கிறார்.

பி.புகழேந்தி, வ.க.ரவிசந்திரன், கே.சாமுண்டீஸ்வரி, எஸ்.கமலா சேகர் எம்.சி., மதுமிதா மதன் எம்.சி., டி.ராஜேஸ்வரி சங்கர் எம்.சி. ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஈ.விக்னேஷ்வரன், ராஜேஷ், டி.ஜெபதுரை, ஜெ.குப்புசாமி, எஸ்.சிவக்குமார், ஆர்.ஓம்பிரகாஷ், வி.யோபு, கே..சுந்தர், பி.சுரேஷ், க.குருநாதன், கே. வெங்கடேசன், ஆர். சஞ்சீவி, ஆர்.மஞ்சுநாதன், ஆர்.ரத்தினகுமார், துளசிராமன், டி.கே.கோட்டி, வி. நடராஜன், எஸ்.ரமணி, சீனிவாசன், பி.கோவிந்த ராஜன், எஸ்.மலைராஜன், கே. லட்சுமணன், ஆர்.பரஞ்ஜோதி, எம்.ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன், தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரணி மாலா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் மாநகரச்செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., இ. கருணாநிதி எம்.எல்.ஏ., மேயர் க.வசந்த குமாரி, ஜி. காமராஜ், மு.ஆதிமாறன், லயன் எஸ்.சங்கர், பொன். சதாசிவம் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரிதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக மணிவண்ணன், ஐசக் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# வேளச்சேரி கிழக்குப் பகுதி கழக அவசர ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி கழக செயலாளர் துரை கபிலன் அறிவிப்பு!

சென்னை, அக்.29

வேளச்சேரி கிழக்குப் பகுதிக் கழக அவசர ஆலோசனைக் கூட்டம்

இன்று (29.10.2023) மாலை 5 மணி அளவில் பகுதி கழக அவைத் தலைவர் அருணா வேலாயுதம் தலைமையில் பகுதி கழக அலுவலகத்தில் (32/99 கிழக்கு கடற்கரை சாலை) நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வேளச்சேரி கிழக்குப் பகுதி கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக வட்ட கழக இளைஞர் அணி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மன்ற செயலாளர், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 2023 நவம்பர் 04 கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் ஹெல்த் வாக் நடைபயிற்சி துவக்கி வைத்தல், 2023 நவம்பர் 04 வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் புதிய வாக்காளர் சேர்த்தல் மற்றும் இறந்தவர்களின் பெயரை நீக்குதல், 2023 நவம்பர் 05 திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும் பாக முகவர் பயிற்சி பாசறை கூட்டம், டிசம்பர் 15 சேலம் மாவட்டத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாடு, கழக ஆக்க பணிகள் குறித்து.

இக்கூட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வேளச்சேரி கிழக்கு பகுதி கழக செயலாளர் துரை கபிலன் கேட்டுக்கொள்கிறார்.

## ச.சண்முகநாதன் தலைமை! தமிழச்சி தங்கபாண்டியன் - இறையன்பன் குத்தூஸ் - எஸ்.மோகன் - கவிஞர் நன்மாறன் பங்கேற்பு!

# சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் கவிதை ஒப்பித்தல் போட்டி!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. பரிசு வழங்குகிறார்கள்!

சென்னை, அக்.29

சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி- மாணவியருக்கான கலைஞரின் கவிதைகள் திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி 30.10.2023 - திங்கட்கிழமை அன்று காலை 9 மணிக்கு சென்னை தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச. சண்முகநாதன் தலைமை வகிக்கிறார்.

மயிலை இரா.கா.இளங்கோவன், நந்தனம் ஆர்.கே.சிவகுமார், எஸ்.ஆர்.ராஜா சிவகுமார், கோயில் தி.ரமேஷ், ஆனந்தராஜ், ஜி.எம்.செல்வராஜ், அ.தேவேந்திரன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

நந்தனம் கி.மதி, மயிலை எஸ்.முரளி, கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாம்பலம் ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே.மணி, என்.அன்பழகன் ஆகியோர் தொடக்க உரையாற்றுகின்றனர்.

நடுவர்களாக முனைவர் நெல்லை சா.அசரியா, சா.தேவராசு, கவிஞர் வேளாங்கண்ணி, பொன்னிவளவன் ஆகியோர் இருந்து வெற்றியாளர்களை தேர்வு செய்கின்றனர்.

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைத் தலைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. , கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநிலச் செயலாளர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், தி.மு.க. மாணவர் அணி மாநில இணைச் செயலாளர் எஸ். மோகன், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர் கவிஞர் நன்மாறன் ஆகியோர் போட்டிகளைத் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்குகின்றனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்புப் பரிசை மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ., மாணவ-மாணவியருக்கு ஊக்கப்பரிசை தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் சீ.கிருஷ்ணமூர்த்தி, டி.ராஜவேலு, அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன், ஏ.தாஸ், மா.பா.அன்பு பால கிருஷ்ணன், அ.தவநேசன், இ.வெற்றிவேல், கோ. கண்ணன், துரை பார்த்திபன், ப.பொன்னுசாமி,

இ.டி.கமல், தட்சன், ஹரிஹரன், மு.ம. செந்தில்குமார், எம். கிருஷ்ணமூர்த்தி, ந.மோ. முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, பி.மாரி, பி.ஜெயக்குமார், ஆர்.சக்திவேல், ஜி.பி. செந்தில்குமரன், எம்.எஸ். பழனி, மு.செல்லகுமார், என். துரை, எஸ்.லட்சுமி காந்தன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஜி.மோகன்ராஜ் நன்றி கூறுகிறார்.